ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௪. பிரபவஸூ ஆனிமீ பகுதி ௬.
Vol 4. *June & July 1927.* No. 6.

யக்ஷப்ரச்நம்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி.)

அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு புருஷார்த்தங்களுள் சிறந்ததாகிய மோக்ஷத்தைப்பெற விரும்புவான் "தரதி ஶோகம் ஆத்மவித்" "தரதிசோகம் ஆத்மவித்" (ஆத்மாவையறிந்தவன் சோகத்தைக் கடக்கிறான்) என்றும், "தத்வஜ்ஞாநாந் மோக்ஷலாப:" "தத்வஜ்ஞாநாந் மோக்ஷலாப:" (உண்மையறிவால் வீடு பேறும்) என்றும் சொல்லப்பட்டபடி ஆத்மஜ்ஞாநத்தைப் பெற வேண்டும். அத்தகைய ஆத்மஜ்ஞாநத்தைப் பெறவிரும்புவான் ஒருவன் அறியத்தக்கவைகளை நச்சுப்பொய்கைக்கரையில் யக்ஷவடிவந்தாங்கிநின்ற தர்மதேவதை தர்மபுத்திரர் வாயிலாக வெளியிடக் கருதி, அதிருட்பமாயும் அந்தரங்கமாயுமுள்ள அர்த்தங்களைத் தம்மனத்திற்கொண்டு வெளித்தோற்றத்திற்கு வேறுபொருள் தோன்றுமாறு சிலவினாக்களைக் கேட்க, தர்மபுத்ரர் அவற்றை நன்கறிந்து தக்கவிடையளித்தார். அவை:—

(௧) கிம்ஸ்விதாதித்ய முந்நயதி கேச தஸ்யாபிதச்சரா:।
கச்சைநமஸ்தம் நயதி கஸ்மிஞ்ச ப்ரதிதிஷ்டதி॥

கிம்ஸ்விதாதித்ய முந்நயதிகேச தஸ்யாபிதச்சரா:
கச்சைந மஸ்தம் நயதிகஸ்மிச்ச பிரதிதிஷ்டதி

(இதன்பொருள்) * ஆதித்யனை (சூரியனை)த் தோற்றுவிப்பது எது? அவனைச்சுற்றிச் சஞ்சரிப்பவர் யார்? அவனை மறையச்செய்வது எது? அவன் எங்கே நிலைபெறுகிறான்? எ-ம்.

(உ) ப்ரஹ்மாதித்யமுந்நயதி தேவாஸ்தஸ்யாபிதஶ்சரா: ।
யமஶ்சாஸ்தம் நயதிச ஸத்யேச ப்ரதிதிஷ்டதி ॥

ப்ரஹ்மாதித்ய முந்நயதி தேவாஸ் தஸ்யாபிதச்சரா:
தர்மச்சாஸ்தம் நயதிச ஸத்யேச ப்ராதிதிஷ்டதி.

---

* ஆதத்தே ஶப்தாதீந் ஶ்ரோத்ராதிபிரிதி ஆதித்ய:-
ஜீவ:. (இந்திரியங்கள் வாயிலாக விஷயங்களைக் கொள்பவன்) என்ற வ்யுத்பத்தியால் ஆதித்யன் என்ற சொல்லானது ஜீவனை உணர்த்தும். அவனைத் தோற்றுவிப்பதாவது:— அறிவிப்பதாம். ஆத்மஜ்ஞானத்தைப் பெற விருப்பமுடைய ஒருவன் தன் யுக்தியையே பற்றுசாகக்கொண்டு ஆத்மாவின் இயல்பை ஆராயப்புகுமளவில் அதனியல்பை அவன் முற்றிலுமுணர்வது அரிதாகவிருக்கும். எவ்வாறெனின்; உலகில் ஒவ்வொருவரும் தன்னைச் சுட்டிக் காட்டுமிடத்து நான் என்ற சொல்லைப் பிரயோகிப்பதால் நான் என்ற சொற்குப் பொருளெதுவோ அதுவே ஆத்மா வென்றறியக்கிடக்கிறது. அங்ஙனமறியவே நான் மனிதன் நான் குருடன் என்பது முதலிய வழக்கால் நான் என்ற சொற்குச் சரீரமும், கண்முதலிய இந்திரியங்களும் பொருளாகக் கொள்ளவேண்டியதாயிருக்கிறது. அவ்வாறு கொண்டால் எனதுடல் எனது கண் என்பதில் சரீரமும் இந்திரியங்களும் உடைமைகளாகவும் இவற்றையுடைய ஒருவன் உளனாகவும் தோற்றலாகாது. மேலும் சரீரமே ஆத்மாவென்று கொண்டால் ஜாக்ரதை நிலையிலும், ஸ்வப்பனவஸ்தையிலும் 'நான் மெலிந்துளேன்' 'நான் பருத்துளேன்' என்றஉணர்ச்சி தோன்றி ஸுஷுப்தி நிலையில் அவ்வுணர்ச்சி தோன்றாதொழியலாகாது. இன்னும் 'உறங்குவதற்கு முன்பு இவையெல்லா மறந்திருந்த நான் உறங்குகிறபோது என்னுடம்பு முட்பட அறிந்திலேன்' என்ற உணர்ச்சியாலும், 'நான் ஜன்மாந்தரத்திற் செய்த பலமிது' என்ற லோகவ்யவஹாரத்தாலும் ஜன்ம மாணமில்லாமல் எப்பொழுதுமுள்ள ஒருவன் உளனென்று ஊகிக்க வேண்டியதாயிருக்கிறது. அவ்வாறு ஊகிக்கப்படுகின்றவனைப் பிரத்யக்ஷத்தாலும், அநுமானத்தாலும் அறியமுடியாதாதலால் வேறு எந்த ப்ரமாணத்தால் ஆத்மா இன்னான் என்றும் இத்தன்மையினனென்றும் தெளிவாக அறியக்கூடுமென்பது இவ்வினாவிலறிந்து கொள்ளத்தக்கபொருளாம்.

(இ-ள்) (1) ஆதித்யனைத் தோற்றுவிப்பது வேதமாம்.

(2) அவனைச் சுற்றிச் சஞ்சரிப்பவர் தேவர்கள்.

(3) அவனை மறையச்செய்வது தர்மமாம்.

---

(1) முன்னுரைக்கப்பட்ட திருஷ்டாந்தங்களால் ப்ரத்யக்ஷத்தாலும், அநுமானத்தாலும் இன்னுனென்றும் இத்தன்மையினனென்றும் அறியப்படாத ஜீவாத்மாவை, தேஹம் இந்திரியம் மனம் ப்ராணன் புத்தி என்ற இவைகளைக்காட்டிலும் வேறானவனாய், நித்யனாய், ஜ்ஞாநாநந்தமயனாயிருப்பவனென்று அறிவிப்பது வேதமாதலால் இங்கு 'ஆதித்யனைத் தோற்றுவிப்பது வேதமாம்'என்று சொல்லப்பட்டது. "ப்ரத்யக்ஷேணாநுமித்யா வா யஸ்தூபாயோ ந வித்யதே, ஏனம் விதந்தி வேதேன தஸ்மாத் வேதஸ்ய வேததா" (யாதொன்றை அறிகிற விஷயத்தில் ப்ரத்யக்ஷ ப்ரமாணமும் அநுமானப்ரமாணமும் உபயோகமாக ஆகிறதில்லையோ அப்பொருளை வேதத்தினாலறிகிறார்களாதலால் வேதத்திற்கு வேதம் என்று பெயர் வழங்கலாயிற்று.) என்றதனாலும் வேதம் ஆத்மாவை அறிதற்குச் சாதனமாயிருக்குமென்பது பெறப்படும்.

(2) இங்ஙனம் ஆத்மா வேதத்தாலே அறியப்படுமவனாயிருப்பானாகில் எல்லோரும் அதைப்பயின்று ஆத்ம ஸாக்ஷாத்காரத்தை எளிதில ஏன்? அடையக்கூடாதென்பதற்குச் சமாதானஞ் சொல்லப்படுகிறது.

இங்குத் தேவர் என்றசொல் சமதமாதிகளை யுணர்த்தும். சமதமாதிகள் ஆத்மகுணங்களாயும் ஆத்மாவை ஸாக்ஷாத்கரிப்பதற்கு இன்றியமையாத ஸாதனமாயு மிருப்பதால் அவனைச் சுற்றிச் சஞ்சரிப்பவர் தேவர்களென்று குறிப்பிடப்பட்டது. வேதத்தால் ஆத்மா இன்னானென்றும் இத்தன்மையினனென்றும் பேசப்படுவானே யன்றி ஸாக்ஷாத்கரிக்கப்படான். அவனை ஸாக்ஷாத்கரிக்கவேண்டுமானல் சமதமாதிகளாகிய ஸாதனங்களைக்கொண்டே பெறவேண்டும். இந்தச் சாதனத்தைப் பெறாதார் வேதத்தை நன்கறிந்தவராயிருந்தாரேனும் அவர் ஆத்ம ஸாக்ஷாத்காரத்தைப்பெற வியலாதென்பது பெறப்படும்.

(3) ஜீவாத்மா தன்னை ஸாக்ஷாத்கரித்த பின்னர் இவனுக்கு நியந்தாவாகிய பரமாத்மாவை இவன் அடையவேண்டியது முறையாதலால் இவனை அவனிடத்தில் அடைவிப்பது இன்னதென்றுரைக்கப்படுகிறது.

தர்மம் என்றது இங்கு யஜ்ஞம் முதலிய கர்மாநுஷ்டானங்களையும், உபாஸனையையுமுணர்த்தும். அவனை மறையச்செய்வதாவது:— எண்குணங்களோடு ஹ்ருதய புண்டரீகத்தில் எழுந்தருளியிருக்கிற ஸர்வேச்வரனிடத்தில் ஜீவன் கூடும்படி செய்வதாம். பயனைக் கருதாமற் செய்கின்ற தர்மாநுஷ்டானத்தால் ஆத்மாவுக்கு ஹ்ருதய சுத்தியுண்டாகி ஸமாதி நிலை கைகூடும்; அதனால் ஆத்மா இதரவிஷயங்களினின்றும் ஒழிவுபெற்று ஹ்ருதயாகாசத்தில் இவனது தியானத்திற்கு விஷயமாக எழுந்தருளியிருக்கிற பரமாத்மாவை அடைந்து சுகமுறுகிறானாதலால் இங்குத் 'தர்மம் அவனை மறையச் செய்கிறதென்று சொல்லப்பட்டது. இதனால் சர்மோபாஸநாதி தர்மங்களையும் முமுக்ஷுவான ஜீவன் கைக்கொள்ள வேண்டுமென்பதுணர்த்தலாயிற்று.

(4) *அவன் ஸத்பத்தில் நிலைபெறுகிறான். (எ-ம்.)

தொடரும்.

ஸ்ரீ:

திருவடியுரைத்த அடையாளம்.

ஸ்ரீய:பதியாகிய ஸர்வேசுவரன் ஸ்ரீராமபிரானாகவந்தவதரித்த போது அவனது திருமார்பகத்தைவிட்டு இறையுமகலாதுறையும் ஸ்ரீதேவியானவள் சீதாபிராட்டியாக வந்தவதரித்தாள். இவள் தன் கிருபை முதலிய குணங்களை எல்லோருமறிந்து தன்னைப்பற்றி நன்னிலைபடைதற்குத் தன்னநுஷ்டானத்தாலே வெளியிடத்திருவுள்ளம்பற்றித் தண்டகாரண்யத்தில் எழுந்தருளியிருக்கும்போது இராவணன் பிரித்தான் என்றொரு வியாஜத்தாலே இலங்கையில் அசோகவனத்திற் சிறையிருந்தாள். அப்பொழுது ஸ்ரீராமபிரான் "[illegible]" "ஆத்மாநம் மாநுஷம்மந்யே" (என்னை மனுஷ்யனாக நினைக்கிறேன்.) என்று தான்கொண்ட மனுஷ்யபாவனைக்கேற்பச் சீதாபிராட்டி சென்றவிடமறியாமல் இளையபெருமா

---

(4) முமுக்ஷுவான ஜீவன் இந்தச் சரீரத்தோடு கூடியிருக்கின்றபோது கர்மோபாஸனையின் பலத்தால் ஸமாதி நிலையுற்று ஹ்ருதயவர்த்தியான ஸர்வேசுவரனையடைந்து சுகமுறுவானாயினும் இங்ஙனம் சுகமுற்ற ஜீவன்முக்தனுக்கு இந்தச்சரீரங் கழிந்தபின் அவன் எவ்விடத்தில் நிலைபெறுகிறான் என்பதற்குச் சமாதானம உரைக்கப்படுகிறது.

ஸத்யம் என்றது எக்காலத்திலும் எவ்வாற்றானும் மாறுதலடையாத மெய்ப்பொருளாகிய பரமாத்மாவைக் குறிக்கும். ஜீவன்முக்தனாகிய சேதனன் கர்மவசத்தாற் பெற்ற இந்தச் சரீரத்தைக் கர்மம் ஒழிந்தபின் ஸர்ப்பம் சட்டையைக் கழற்றுவதுபோல ஒழித்து அர்ச்சிராதி மார்க்கத்தாலே பரமாத்மாவை அடைந்து அவனை விட்டகலாது நித்யாநந்தத்தை அநுபவிக்கின்றானதலால் இங்கு அவன் ஸத்பத்தில் நிலை பெறுகிறானென்று சொல்லப்பட்டது.

ளுடன் அப்பிராட்டியைத் தேடிக்கொண்டு பம்பாதீரத்திற் கெழுந்தருளி சுக்ரீவனோடு ஸ்நேகஞ்செய்து அவனுக்கு விரோதியான வாலியைவதைத்துக் கிஷ்கிந்தாநகரத்திற்கு அரசனாகச்சுக்ரீவனுக்கு முடிசூட்டியபின் மழைக்காலம் முடியும்வரை அவன் ப்ரஸ்ரவண கிரியிலே தங்கியிருந்தான்.

மழைக்காலம் நீங்கியபின்பு சுக்ரீவனை வரவழைக்க அவன் பிராட்டியைத் தேடுதற்குத் திரள்திரளாக வானரவீரர்களை அனுப்புகிறவளவில் தெற்குத்திக்கில் அங்கதன் ஜாம்பவன் ஹநுமான் பஹராஜர் முதலியோரை ப்ரதானராகவைத்துப் பெருந்திரளான வானரப்படையை அனுப்ப, 'ஹநுமானாலல்லது இக்கார்யம் மற்றொருவரால் கைகூடாது' என்று திருவுள்ளம்பற்றிய ராமபிரான் பிராட்டியைக்கண்டபோது அவளுக்கு நம்புதலுண்டாவதற்குத் தமது திருவாழிமோதிரத்தை ஹநுமான் கையிற்கொடுத்துச் சில விருத்தாந்தங்களையுங் கூறும்படி அருளிச்செய்தார்.

பின்பு எல்லோருஞ்சென்று தெற்குத்திக்கில் ஆராய்ந்து பார்த்ததில் ஓரிடத்திலும் பிராட்டியைக் காணாததினால் துக்கமுற்று எல்லோரும் உயிர்துறப்பதாகத் தீர்மானித்தார்கள். அப்பொழுது பெரியதிருவுடையாருக்கு (சடாயுவுக்கு) மூத்தவராகிய சம்பாதி என்பவரால் இராவணன் இருக்கை லங்காபட்டிணம் என்று கேள்வியுற்று எல்லோரும் களிப்புடையவராய் இக்கரையிலிருந்து ஹநுமானை அனுப்ப அவரும் கடல்கடந்து சென்று இரவில் லங்கையிற் புகுந்து இராவணனுடைய அந்தப்புர முதலிய எல்லாவிடங்களிலும் பிராட்டியைச் சுற்றிப்பார்த்தவிடத்திலும் காணமல் கடைசியில் அசோகவனத்தில் நாய்களினிடைப்பட்ட மான்போல எழுநூறு ராக்ஷஸிகளிடையில் மலங்கமலங்க விழித்துக்கொண்டு துன்புறுகின்ற பிராட்டியைப் பல காரணங்களாலும் 'இவளே பிராட்டி' என்று நிச்சயித்துச் சிறிய வடிவங்தாங்கி அங்குள்ள சிம்சுபாவிருக்ஷத்தில் மறைந்து நிற்கையில், அப்பொழுது இராவணன் காமமோஹிதனாய் வந்து பிராட்டியைப் பலவாறு வேண்டி நிற்கப் பிராட்டி அவன் முகத்தைப்பாராமல் நிந்திக்கவே அவன் ராக்ஷஸிகளைநோக்கி 'இவளை மிகவும் வருத்தி வசப்படுத்துக' என்று கட்

டனையிட்டுச்செல்ல அவர்களும் அவ்வாறே முன்பிலும் அதிகமாகத் துன்புறுத்த, பிராட்டி 'இனி நாம் உயிர்தாங்கிக்கொண்டிருக்க முடியாது' என்று நிச்சயித்து ராக்ஷஸிகள் உறங்கினசமயத்தில் தன்னுயிரைவிட யத்தனித்தாள்.

அப்பொழுது ஹநுமான் 'இனிநாம்பார்த்திருக்க வொண்ணாது' என்று நினைத்து, "𑌏𑌵𑌂 𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌾𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌾𑌂 𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌿𑌤𑍍𑌵𑌾 𑌮𑌹𑌾𑌕𑌪𑌿𑌃, 𑌸𑌂𑌶𑍍𑌰𑌵𑍇 𑌮𑌧𑍁𑌰𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌵𑍈𑌦𑍇𑌹𑍍𑌯𑌾 𑌵𑍍𑌯𑌾𑌜𑌹𑌾𑌰 𑌹" "ஏவம் பஹுவிதாம் சிந்தாம் சிந்தயித்வா மஹாகபி:, ஸம்ச்ரவே மதுரம் வாக்யம் வைதேஹ்யா வ்யாஜஹார ஹ" என்றபடி செவிப்பட்டபோதே இனிமையைத் தரவல்ல ராமகுணசேஷ்டிதங்களான வாக்யங்களைச் சொல்ல 'இத்தனைகாலமுமில்லாததொன்று இப்பொழுது செவிப்படுதற்குக் காரணம் யாது' என்று சொல்வந்த வழியே சிம்சுபா விருக்ஷத்தின் மேலிருந்த ஹநுமானைக்கண்டு 'முன் வஞ்சித்த ராவணனே இவ்வுருவந்தாங்கி வந்துள்ளான்' என்று பயமுற்று மூர்ச்சித்துச் சிறிதுநேரம் சென்றபின் தெளிந்து,

𑌕𑌿𑌂 𑌨𑍁 𑌸𑍍𑌯𑌾𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌮𑍋𑌹𑍋𑌽𑌯𑌂 𑌭𑌵𑍇𑌦𑍍𑌵𑌾𑌤𑌗𑌤𑌿𑌸𑍍𑌤𑍍𑌵𑌿𑌯𑌂 ।
𑌉𑌨𑍍𑌮𑌾𑌦𑌜𑍋 𑌵𑌿𑌕𑌾𑌰𑍋 𑌵𑌾 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌯𑌂 𑌮𑍃𑌗𑌤𑍃𑌷𑍍𑌣𑌿𑌕𑌾 ॥

கிந்நுஸ்யாச்சித்த மோஹோயம் பவேத்வாதகதிஸ்த்வியம்
உந்மாதஜோ விகாரோவா ஸ்யாதியம் ம்ருகத்ருஷ்ணிகா.

இஃதென்ன! ராமகதையைக்கேட்டு அதைச் சிந்தித்ததாலுண்டான மனத்தின்மயக்கமோ? உபவாஸத்தாலுண்டான வாதத்தின் விகாரமோ? உன்மத்தத்தாலுண்டான விகாரமோ? கானலைத் தண்ணீரென்று கருதுவதுபோலப் பொய்யான ஆசையோ? என்று பல வாறாக ஆராய்கின்றவளவில்,

"அண்டர்நாயகனருட்டேன்யானெனுத்
தொண்டைவாய்மயிலினைத்தொழுதுதோற்றினன்".
"அடைந்தனெனடியனேனிராமனாணையால்
குடைந்துலகனைத்தையுநாடுங்கொட்பினல்
மிடைந்தவருலப்பிலர்தவத்தைமேவலான்
மடைந்தைநின்சேவடிவந்துநோக்கினேன்".

என்று ஹநுமான் அஞ்சலிசெய்து நான் ராமபிரானுடைய தூதனாவேன். அவரது ஆணையால் உம்மைத்தேடுதற்கு அலைந்து திரிகின்றவர் எண்ணற்றவரன்றோ! அடியேன்செய்த பாக்யவசத்தினால் உமது திருவடியை வந்தடைந்தேன்; என்று பலவாறு ராமபிரானுடைய விருத்தாந்தங்களை எடுத்துரைத்தவிடத்திலும் பிராட்டி,

𑌕𑍍𑌵𑌤𑍇 𑌰𑌾𑌮𑍇𑌣 𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌃 𑌕𑌥𑌂𑌜𑌾𑌨𑌾𑌸𑌿𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌂।
𑌵𑌾𑌨𑌰𑌾𑌣𑌾𑌂 𑌨𑌰𑌾𑌣𑌾𑌂𑌚 𑌕𑌥𑌮𑌾𑌸𑍀𑌤𑍍𑌸𑌮𑌾𑌗𑌮𑌃 ॥
𑌯𑌾𑌨𑌿𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑌚 𑌵𑌾𑌨𑌰.

க்வதே ராமேண ஸம்ஸர்க: கதம்ஜாநாஸிலக்ஷ்மணம்
வாநராணும் நராணும்ச கதமாஸீத்ஸமாகம:
யாநிராமஸ்ய லிங்காநி லக்ஷ்மணஸ்யச வாநர.

ராமபிரானோடு உனக்கு எவ்விடத்திற் சேர்க்கையுண்டாயிற்று? வானரர்கட்கும், நரர்கட்கும் எவ்வாறு சிநேகமுண்டாயிற்று? ராமலக்ஷ்மணர்கட்கு அடையாளங்களெவை? என்று கேட்டாள்.

அப்பொழுது ஹநுமான் ராமபிரானுடைய ஸத்யபராக்ரம முதலியவற்றையும், அவரது திருமேனியின் வர்ணனைகளையும் தெளிவாக எடுத்தோதினர். இதுநிற்க;

நடத்தலரிதாகுநெறிநாள்கள்சிலதாயர்க்
கடுத்தபணிசெய்திவணிருத்தியெனவச்சொற்
குடுத்ததுகிலோடுமுயிருக்கவுடலோடும்
எடுத்தமுனிவோடுமயனின்றதுமிசைப்பாய்

என்றும்,

நீண்டமுடிவேந்தனருளேந்திநிறைசெல்வம்
பூண்டதனைநீங்கிநெறிபோதலுறுநாளின்
ஆண்டநகராரையொடுவாயிலகலாமுன்
யாண்டையதுகானெனவிசைத்ததுமிசைப்பாய்

என்றும் உரைத்தபடி ராமபிரான் பிதுர்வசனபரிபாலனஞ் செய்தற்கு வனம் செல்கின்ற காலத்து உம்மை நோக்கி 'உன்னுடைய மெல்லிய கால்களால் என்னோடு காட்டில் நடப்பதற்கியலாதாதலால்

சிலநாள் என்னுடைய மாதாக்களுக்குரிய பணிவிடைகளைச் செய்து கொண்டு இங்குறைவாயாக' என்றுரைத்தபோது நீர் மிக்க துக்கமும் கோபமுங்கொண்டு அவர் பக்கம் நின்று 'நீர் செல்லும் காலம் எத்தன்மையது? உடன்மைவிட்டுப் பிரிந்திருப்பதைக் காட்டிலும் அவ்வனம் சுடுமியல்பிற்றோமோ?' என்றுரைத்ததையும் தெரிவிக்கும்படி ராமபிரான் கட்டளையிட்டார்.

மீட்டுமுரைவேண்டுவனவில்லையெனமெய்ப்பேர்
நீட்டியிது நீட்டரியசெய்கையதுசெவ்வே
நீட்டிதெனநேர்ந்தனனெனுநெடியகையால்
காட்டினனொராழியதுவாணுதலிகண்டாள்

என்றுரைத்துத் திருவாழிமோதிரத்தைக் காட்டினார். அப்பொழுது பிராட்டி ஹநுமானை வியந்து கொண்டாடித் தமது முன்றானையில் முடிந்து வைத்திருந்த சூளாமணியைக் கண்டதற்கு அறிகுறியாகக் கொடுத்துச் சித்திரக்கூட பர்வதத்தில் நிகழ்ந்த காகாசுர விருத்தாந்தத்தையும் தெரிவிக்கும்படி அருளிச்செய்தார்.

திருவடி சீதாபிராட்டியிடத்தில் இவ்வளவுமாத்திரமே அடையாளமுரைத்ததாக ஸ்ரீவால்மீகிராமாயணத்திலும், கம்பராமாயணத்திலும் சொல்லப்பட்டுளது. ராமபிரான் திருவடியிடத்திற் பலவிருத்தாந்தங்கள் உரைத்தனுப்பியதாக மயர்வறமதிநலமருளப் பெற்ற பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளார்.

அவை:—

திருவடி பிராட்டியைக் கண்டு (க) கருத்துச் சுருண்டிருக்கும் குழலையுடைய தேவியே! உமக்கடியேனான நான் விண்ணப்பஞ் செய்கின்ற வார்த்தையைக் கேட்டருளவேண்டும். நெருங்கின ரத்னங்களையுடைய கிரீடத்தைபணிந்த உமது தந்தையாராகிய ஜனகர் கன்யாசுல்கமாகவைத்த ருத்ர தனுசை முறித்தறிந்து

(க) நெறிந்தகருங்குழன்மடவாய்நின்னடியேன்விண்ணப்பம்
செறிந்தமணிமுடிச்சனகன்சிலையிறுத்துநினைக்கொணர்ந்த
தறிந்தரசுகளைகட்டவருந்தவத்தோனிடைவிலங்கச்
செறிந்தசிலைகொடுதவத்தைச்சிதைத்ததுமோரடையாளம்.

'இவளைக் கைக்கொண்டருளவேண்டும்' என்று ஸமர்ப்பிக்க ராமபிரான் தேவரீரைப் பாணிக்ரஹணம் பண்ணிக்கொண்டு போந்ததறிந்து இருபத்தொருகலைமுறை துஷ்டக்ஷத்திரியரான ராஜாக்களாகிய களையை ஒழித்து ஒருவராலும் செய்யவொண்ணாத தபசையுடையனாயிருந்துள்ள பரசுராமன் நடுவழியில் வந்து 'வல்லையேல் என்வில்வலிகாணாய்' என்று தனக்குத்தகுந்த அப்பரசுராமன் கையிலிருந்த விஷ்ணுதனுசை வாங்கிக்கொண்டு அவனுடைய தபஸை அழித்ததும் ஓரடையாளமாம்.

மேலும் திருவயோத்தியில் எழுந்தருளியிருக்கிற காலத்தில் ஒருநாள் இராத்திரிவேளையில் ஏகாந்தமானவிடத்தில் (உ) * மல்லிகைப்பூவினால் தொடுக்கப்பட்ட சிறந்த மாலையால் தேவரீர் பெருமானைக் கட்டியதும் ரஹஸ்யமான அடையாளமாகுமன்றோ! இன்னும் (௩) திருப்பாற்கடலை மந்திரபர்வதம் கலக்கினாற்போலே பரிசுத்தமாயிருந்த கைகேயியின் மனத்தை மந்தரை என்பவள் கலக்க அதனால் கலக்கப்பட்ட மனத்தையுடையளாகிய கைகேயி தனக்கு முன் சம்பராசுர யுத்தகாலத்தில் தருவதாகச்சொல்லிய இரண்டு வரங்களையும்பெறக் கருதி, தசரதனைநோக்கிப் 'பதினான்கு வருஷம் ராமனை வனவாசம் செய்யும்படிசெய்து பரதனுக்கு ராஜ்யாபிஷேகம் செய்துவைத்தல்வேண்டும்' என்றுவேண்ட அதற்குத் தசரதன் உடன்படாது மறுத்தபோது கைகேயி, 'அறுபதினாயிரவருஷகாலம் ஸத்பத்தில் நிலைநின்றவராகிய நீர் இப்பொழுது அஸத்ய

(உ) அல்லியம்பூமலர்க்கோதாயடிபணிந்தேன்விண்ணப்பம்
சொல்லுகேன்கேட்டருளாய்துணைமலர்க்கண்மடமானே
எல்லியம்போதினிதிருத்தலிருந்ததோரிடவகையில்
மல்லிகைமாமாலைகொண்டங்கார்த்ததுமோரடையாளம்

* மல்லிகைமாலைகொண்டு பிணித்தல் அன்புமேலிட்டபோகதசையில் உண்டாகுமோர் லீலாவிசேஷம்.

(௩) கலக்கியமாமனத்தனளாய்கைகேயிவரம்வேண்ட
மலக்கியமாமனத்தனனாய்மன்னவனும்மறாதொழிய
குலக்குமரர்காடுறையப்போவென்றுவிடைகொடுப்ப
இலக்குமணன்றன்னோடங்கேகியதோரடையாளம்.

பிரதிஜ்ஞையுடையவராகிவிட்டீர்போலும்; இவ்வரங்களைத் தராதொழிவீரேல் என்னுடைய பிராணனைவிட்டுப் பழிவிளைப்பேன்' என்றுபமாமுகமுடையவளாயிருந்ததுமாத்திரமன்றி விலக்கவொண்ணுதகோபமுடையவளாயும் நின்றாள். இந்நிலையில் அதர்மத்தைத் தர்மமாகநினைத்து மயங்கிய அர்ஜுனன் பின் உத்தமமான தர்மம் இன்னதென்பதைக் கண்ணபிரானிடத்திற் கேட்டுத் தெளிந்ததுபோலத் தசரதனுக்குத் தெளிவிப்பாரில்லாததினால் கலக்கப்பட்ட மனத்தையுடையவனாய் மறுக்கமாட்டாமற் சோகமுற்றுக்கிடக்க அவ்வளவில் ராமபிரான் 'காலதாமதமாயிற்று' என்று அந்தப்புரத்திற்புகுந்து 'ஐயனெங்கே' என்று கைகேயியை நோக்கிக் கேட்க, அவள் 'உம்மை வனவாசம் போகும்படி சொல்லமாட்டாமல் எனக்கு முன் தந்தவரம் பலவித்தியடையப்போகிற ஸமயத்தில் சோகித்துக்கிடக்கிறார்' என்றாள். அதற்கு ராமபிரான் எனக்கு அவர் நியமிக்கவேண்டுமென்பதொன்றில்லை; நீர் கட்டளையிட்டதே போதுமானது. இதுநிற்க; 'ஐயரை எழுப்பிக்கண்டு போகலாமோ' என்று கேட்க, அதற்கவள் அவரை நானெழுப்பி அவருக்குள்ள சோகத்தை யகற்றிவிடுகிறேன்; 'நீர் இக்குலத்தின் பெருமையைப் பரிபாலிக்கத் தக்கவராய் எங்கட்குப் புத்திரராயிருந்தீராகில் எங்களுடைய வசன பரிபாலனஞ்செய்யவேண்டும்' என்று விடையளித்தாள். அப்பொழுது 'எல்லா வடிமைகளையுஞ்செய்வேன்' என்று முன் வழிப்பட்ட இளையபெருமாளோடு ராமபிரான் எழுந்தருளியதும் ஒரு அறிகுறியாகும்.

(ச) கூரியவேல் தொழிலில் வல்லவனாகிய குஹப்பெருமானுடன் கங்கைக்கரையில் 'உன் தோழி உம்பியெம்பி' என்று தோழமைகொண்டதும், (ரு) தசரதசக்ரவர்த்தி ராமபிரானைவிட்டகன்ற து

(ச) வாரணிந்தமுலைமடவாய்வைதேவிவிண்ணப்பம்
தோரணிந்தவயோத்தியர்சோன்பெருந்தேவிசேட்டருளாய்
கூரணிந்தவேல்வலவன்குகனோடுகங்கைதனில்
சீரணிந்ததோழமைகொண்டதுமோரடையாளம்.

(ரு) மானமருமென்னோக்கிவைதேவிவிண்ணப்பம்
கானமரும்கல்லதர்போய்காடுறைந்தகாலத்துத்
தேனமரும்பொழிர்சாரல்சித்திரகூடத்திருப்பப்
பான்மொழியாய்பரதனம்பிபணிந்துமோரடையாளம்.

கத்தால் உயிர்துறந்ததைக்கேள்வியுற்ற பரதாழ்வான் கேகயதேசத்திலிருந்து அயோத்திமாநகரம்வந்து தந்தையாருக்குச் செய்யவேண்டிய கடன்முறைகளைச் செய்துமுடித்துப் பின்பு வஸிஷ்டர் முதலானோரோடும் தாய்மார்களோடும் சேனைகள் புடைசூழ ராமபிரான் எழுந்தருளியிருந்த சித்திரகூடமலைச் சாரலையடைந்து 'தேவரீர் இப்பொழுதே அயோத்திக்கு எழுந்தருளவேண்டும்' என்று சரணாகதஞ்செய்ததும், இன்னும் (கூ) சோலைகளும் ஆறுகளும் கல்வட்டங்களும் நிறைந்து மனோஹரமாய் விளங்கும் சித்திரகூட பர்வதத்தில் தேவரீரும் பெருமாளும் ஏகாந்த ரஸமநுபவித்து ஒருவர்க்கொருவர் மாறிமாறிமடியிற் கண்வளர்ந்தருளுகிறபோது இந்திரன் குமாரனான ஜயந்தன் துர்க்குணத்தினால் அற்பஜந்துவாகிய காகத்தின் வடிவை எடுத்துவந்து லோகமாதாவென்று சிறிதேனும் மனத்திற்கொள்ளாமல் தேவரீர் திருமுலைத்தடத்திலே நலிய அவ்வளவில் பெருமாள் உணர்ந்தருளி ஒரு புல்லை எடுத்து ப்ரஹ்மாஸ்திர மந்த்ரத்தை அபிமந்திரித்து அதை மந்தகதிபாக்கி அக்காகத்தின்மேல் விடுத்தருள அக்காகாசுரன் அதைத் தப்பவழிதேடி முன்பு தகப்பனாகிய இந்திரன் வீட்டையடைந்து அங்குத் தந்தையாலும் தாயாராலும் கைவிடப்பட்டு, உறவினராயிருப்பார் காப்பாற்றுவரோ என்று தேவரிடத்திற்செல்ல அவர்களாலும் கைவிடப்பட்டு, ப்ரஹ்மபாவனையில் ஊன்றியவர்களான மிக்க அருளுடைய ரிஷிகள் காப்பாற்றுவார்களோ என்று அவர்களிடத்திற் செல்ல அவர்களும் கைவிடுகைபாலே திறந்துகிடந்த வாசல்தோறும் ஒருகாற்சென்றாப்போலே ஒன்பதின்காலும்சென்று மூன்று லோகங்களையும் வளைய ஓடித்திரிந்தவிடத்திலும் ஒருவரும் காப்பாற்றுவாரில்லாமையால் சீறினாலும் காலைக்கட்டிக்கொள்ளலாம்படி க்ருபாவானாயிருக்கையாலே ஆச்சர்யப்படத் தக்கவனும் எல்லாரையும் குணத்தாலே மகிழ்விப்பவனே! ஓ! யானுனதடைக்கலம் என்று பெருமானு

(கூ). சித்திரகூடத்திருப்பசிறுகாக்கைமுலைதீண்ட
அத்திரமேகொண்டெறியவனைத்துலகுந்திரிந்தோடி
வித்தகனேயிராமாவோநின்னபயமென்றழைப்ப
அத்திரமேயதின்கண்ணையறுத்ததுமோரடையாளம்.

டைய குணத்தைச் சொல்லிக் கூப்பிட அப்பொழுது பெருமாளிரக்கங்கொண்டு முன்பு உயிரை வாங்கும்படி விட்ட அந்த அஸ்திரத்திற்கு ஒரு கண்ணழிவு மாத்திரம் கல்பித்துக் காகத்திற்கு ப்ராணனைக்கொடுத்ததும் அடையாளங்களாகும்.

மேலும் (எ) வஞ்சனையால் உன்னைக் கவர்ந்துசெல்லக் கருதிய ராவணனுடைய கட்டளையால் மாயாவியான மாரீசன் இதற்கு முன் லோகத்திற் கண்டறியாத பொன்போலிருக்கின்ற நிறத்தையும் புள்ளிகளையுமுடைய மானுருவங்கொண்டு தண்டகாரண்யத்தில் பஞ்சவடியிலெழுந்தருளியிருக்கும்போது தேவரீர் முன்பு மனோஹரமாய் விளையாட 'அதைப் பிடித்துத் தரவேண்டும்' என்று பெருமாளைப் பார்த்துத் தேவரீர் அருளிச்செய்தவிடத்து இளைய பெருமாள் 'லோகத்தில் இப்படியிருப்பதொரு மிருகமில்லை; மாரீசன் மாயையால் இவ்வுருவங்கொண்டுள்ளான்' என்றுரைக்கவும் பெருமாள் அதையும் பொருட்படுத்தாமல் தேவரீர் ஆசையின் வழி நின்று இளையபெருமாளைத் தேவரீருக்குப் பாதுகாவலாக்கித் தமக்குச் சிலையே துணையாக மானைப் பின்பற்றிச்செல்ல அது பிடிபடாது ஓடுதலைக்கண்டு 'இது மாயாமிருகம்' என்று திருவுள்ளம்பற்றி அம்பெய்து வீழ்க்க அம்மாரீசன் உயிர் துறக்கும்போது 'ஹா! ஸீதே! ஹா!! லக்ஷ்மண!!' என்று பெருமாள் மிடற்றொலிபோலக் கூப்பிட அதனைத் தேவரீர் கேட்டுப் பெருமாளுக்கு அபாயம் நேர்ந்ததாக நினைத்து 'இதை விரைவிற்சென்று அறிந்துவருவீராக' என்று இளையபெருமாளை நோக்கியுரைக்க அவர் பெருமாளுடைய வீரச்செயலைக்குறித்துப் பலவாறுகூறித் தேறுதலுரைத்ததைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தேவரீர் நிஷ்டூரங்களைக் கூறியதினால் இளையபெருமாள் பிரிந்துபோனதும் ஓரடையாளமாகும்.

(அ) மேலும் பெருமாள் தேவரீரைத்தேடிக்கொண்டு வரும்போது வழியில் மஹாராஜராகிய சுக்ரீவரைக்கண்டு அக்னிசாக்ஷி

(எ) மின்னொத்த நுண்ணிடையாய்மெய்யடியேன்விண்ணப்பம்
பொன்னொத்தமானொன்றுபுகுந்தினிதுவிளையாட
நின்னன்பின்வழிநின்றுசிலைபிடித்தெம்பிரானேகப்
பின்னேயங்கிலக்குமணன்பிரிந்ததுமோரடையாளம்.

(அ) மைத்தகுமாமலர்க்குழலாய்வைதேவிவிண்ணப்பம்
ஒத்தபுகழ்வானரக்கோனுடனிருந்துநினைத்தேட
அத்தகுசீரயோத்தியர்கோனடையாளமிவைமொழிந்தான்
இத்தகையாலடையாளமீதவன்கைமோதிரமே.

யார்கச் சிநேகஞ்செய்தபின்பு பெருமாளுடைய சுகதுக்கங்களைத் தம்மதாகக்கொண்ட ஒத்தசுகதுக்கமுடையவரான வானராதிபதியாகிய அந்த சுக்ரீவர் பெருமாளுடன் கூடியிருந்து பலகோடிக்கணக்கான வானரவீரர்களை உம்மைத்தேடும்படி அனுப்புகிற காலத்தில் சுக்ரீவர் என்னிடத்தில் விசேஷ அபிமானம் வைத்திருப்பதறிந்து 'இவனாலே நமது கார்யங்கைகூடும்' என்று என்மீது ராமபிரான் விசேஷ கடாக்ஷஞ்செய்து இந்த அடையாளங்களைச் சொல்லியருளினர். இல்லாவிடில் 'மல்லிகைமாமாலை கொண்டங்கார்த்தது' அடியேனறியுமாறெங்ஙனம்? என்றுரைத்து இனிமேல் பிராட்டியாருக்கு யாதொரு ஐயப்பாடும் நிகழாதிருப்பதற்குப் பெருமாள் திருநாமமெழுதப்பெற்ற திருவாழிமோதிரத்தைக் காட்டினர். பிராட்டியார் அதைக்கண்டு அளவற்ற ஆநந்தக்கடலிலாழ்ந்தார்.

இங்குச் சீதாகல்யாணமுதல் சுக்ரீவனிடத்தில் நட்புக்கொண்டதுமுடிவாக ராமபிரான் திருவடியிடத்திலுரைத்தனுப்பியதாகச் சொல்லப்பட்டுளது. இவ்வாறு ஸ்ரீவால்மீகிராமாயணத்திலும், கம்பராமாயணத்திலும் காணப்படவில்லை யாதலால் ஒன்றற்கொன்று பெரிதும் வேறுபாடு தோற்றுகிறது. ஆகையால் இவ்விஷயம் ஈண்டாராயத் தக்கதே.

பெரியாழ்வார் குருமுகமாக யாதொரு வேதத்தையும் அத்யயனஞ் செய்யாமல் ஒன்றொழியாத எல்லா வேத வேதாந்தங்களின் விழுப்பொருள்களெல்லாம் எம்பெருமான் அநுக்ரஹ விசேஷத்தினால் அறிந்துகொண்டனர். அதனாலன்றோ இவர் ஸ்ரீவல்லபதேவபாண்டியன் ஸபைக்கெழுந்தருளி "வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்" என்றபடி அவனால் ஸ்தாபிக்கப்பெற்ற பொற்கிழியை யறுத்துப் பரதத்வ நிர்ணயஞ் செய்தார். இதனால் ஸர்வேசுவரன் எல்லாப்பொருள்களையும் இவரது ஜ்ஞாநத்திற்கு விஷயமாக்கினனென்பது தெளிவாகிறது. இதிஹாஸத்திற் காணப்படாத விஷயங்கள் இவரது அருளிச்செயலிற் கண்டவிடத்தில் அவையெல்லாம் அவன் காட்டக் கண்டுரைக்கப்பட்டனவென்றன்றோ கொள்ள வேண்டும். இங்ஙனம் கொள்ளவே அருளிச்செயலிற் கண்டவையெல்லாம் ஸர்வேசுவரன் வாய்மொழியாகுமென்றே ஆராயத்தக்

கது. 'அவன் வாய்மொழி யெல்லாம் உண்மையுடையனவாய்த் திகழுமென்பதிற் சிறிதும் ஐயமுளதோ? இது நிற்க;

காகாசுர விருத்தாந்தத்தைப் பிராட்டியார் திருவடியிடத்தி லுரைத்ததாக ஸ்ரீ வால்மீகி ராமாயணத்திலும், கம்பராமாயணத்திலும் சொல்லப்பட்டுளது. இங்கு அந்த விருத்தாந்தத்தை ஸ்ரீ ராமபிரான் திருவடியிடத்தி லுரைத்தனுப்பியதாகச் சொல்லப்பட்டுளது. இவை ஒன்றற் கொன்றிசையுமாறென்னை யெனின்; பிராட்டியார் ஹநுமானைக் கண்டவிடத்தில் 'இராவணன் இவ்வுருத்தாங்கி வந்துள்ளான்' என்று அச்சமுற்றிருந்தார். பின்பு தெளிவுபெற்றவிடத்திலும் அந்த அச்சத்தின் வாசனையால் ஆராயாது ஹநுமானுரைத்த காகாசுர விருத்தாந்தத்தையே மறுபடியும் பிராட்டியாருரைத்தனுப்பியதாகக் கொள்ளத்தக்கது. பயமுண்டாகிய விடத்துக் கூறியது கூறலும் குணமுடையதாமென்பது நூற்றுணிபு. "ப்ரஸம்ஸாயாம் ப்ரதிஜ்ஞாயாம் ப்ரஸ்நோபேதார்ஜநேபிச, பயேச நிர்ணயேசைவ பௌநःபுந்ய மலங்க்ருதி:" "ப்ரசம்ஸாயாம் ப்ரதிஜ்ஞாயாம் ப்ரஸ்நோபேதார்ஜநேபிச, பயேச நிர்ணயேசைவ பௌந:புஸ்ய மலங்க்ருதி:" என்பதனால் அறியலாம்.

சீதாபிராட்டியார் இராவணனுடைய அசோகவனத்திலிருந்து துக்கசாகரத்தி லழுந்தித் துன்புற்ற காலத்தில் ஹநுமான் தோன்றி பிராட்டியாருக் குண்டாகிய சந்தேகத்தை ஒழித்துத் துக்கத்தை யகற்றி வாழ்வித்தது போல சம்சார சாகரத்தி லழுந்தித் திசை தெரியாதலைந்துத் துன்புறுகின்றவனை ஆசார்யன் அணுகிநின்று தன்னுடைய ஜ்ஞாநாநுஷ்டனங்களால் அவனுக்குண்டாகிய சந்தேகத்தை யகற்றித் திருமந்த்ரோபதேசத்தால் ஸம்பந்த ஜ்ஞாநத்தைப் பிறப்பித்துச் சுகமுறச் செய்வானென்பது இவ்வரலாற்றால் அறியலாகும்.

ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாசிகை.

[காரப்பங்காடு உபயவேதாந்த வித்வான்
சிங்காராசார்யஸ்வாமி எழுதுவது.]

(119-ம் பக்கத்தொடர்ச்சி.)

மேலும் பஞ்சாக்நிவித்யாநிஷ்டனான கேவலனுக்கு அவாந்தர பலம் ஆத்மாநுபவம், ஸாக்ஷாத்பலம் பகவதநுபவம் என்று சொல்லுமது மதஸ்தர்களான பூர்வாசார்யர்களுடைய வசனவிருத்தம்.

கீழ் நிரூபித்தபடி திருவாய்மொழியில் கைவல்யபரமான பாசுரங்களின் திருக்குருகைப்பிரான்பிள்ளான் வ்யாக்யானத்தினுடைய வாக்யங்களுக்கு விரோதம் ஸ்பஷ்டம்.

மேலும் கார்யாதிகரணசுருதப்ரகாசிகையில் பாதநிமதோபாஸாவஸரத்தில் அர்ச்சிராதிகெதியாலே போகிறவனுக்கு சதுர்முக ப்ரஹ்மலோக ப்ராப்தியும், அநந்தரம் பரப்ரஹ்ம ப்ராப்தியும் கூடுமென்பதை, ஜாபகோபாக்யானத்தில் ஜாபகனுக்கு மூர்த்தந்யநாடி நிஷ்க்ரமணமும் அர்ச்சிராதிகெதியும் அவாந்தர பலமான சதுர்முகலோக ப்ராப்தியும் அநந்தரம் ப்ரஹ்ம ப்ராப்தியும் பாரதத்தில் சொல்லப்படவில்லையென்று சுருதப்ரகாசிகையில் நிராகரித்திருக்கிறது.

பஞ்சாக்நிவித்யாநிஷ்டனான கேவலனுக்கு அர்ச்சிராதிகதி ஏற்பட்டு அவாந்தரபலம் ஆத்மாநுபவமும் அநந்தரம் ப்ரஹ்மாநுபவமும் ஸித்தாந்த ஸித்தமாயிருக்கும்பக்ஷத்தில் கார்யாதிகரண பூர்வபக்ஷி பஞ்சாக்நி வித்யாநிஷ்டனையே எடுத்து அவனுக்கு அர்ச்சிராதிகதி பூர்வகமாக பலத்வயத்தையும் உங்களுடைய ஸித்தாந்தத்திலிருப்பதுபோல் இதுவும் கூடுமென்று சொல்லாமல் அப்ரஸித்தமான ஜாபகோபாக்யானத்தை உதாஹரணமாகக் காட்டவேண்டிய

தில்லை. இதைக்கொண்டே கேவலனுக்கு பலத்வயமில்லையென்று ஸ்பஷ்டமாயறியலாம்.

அர்ச்சிராதிகதியுள்ள தக்ஷிணாயநத்தில் சரீரவியோகம் ஏற்பட்டவனுக்கும், உத்தராயணத்தில் சரீரவியோகம் ஏற்பட்டவனுக்கும் வ்யாஹ்ருதி சரீரகப்ரஹ்மோபாஸகனுக்கும், அவாந்தர பலமாக சந்த்ரஸாயுஜ்யமும், ஆதித்யஸாயுஜ்யமும், அக்நிலோக வாஸமும் அவாந்தரபலமாக ஏற்படுவதுபோல் கேவலனுக்கும் கூடுமென்பது அநுபபந்நம். கீழ் நிரூபித்த அதிகாரிகளுக்கு ஏற்பட்டிருக்கிற சந்த்ரஸாயுஜ்யம் முதலானவை வித்யையினுடைய அவாந்தரபலமன்று; அந்த ஆதிவாஹிகர்களில் அந்யதமரான சந்த்ரன் ஆதித்யன், அக்நி இவர்களுடைய ஸத்காரவிசேஷத்தாலே ஏற்படுகிற விச்ரமார்த்தமுள்ள விளம்பம். இப்படியே 'சுயநெவிவ டக்ஷிணே' 'அபநேபிசதக்ஷிணே' என்கிற இடத்தில் சுருதப்ரகாசிகையில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்படிச் சொல்லாதபக்ஷத்தில் கார்யாதிகரண சுருதப்ரகாசிகையில் அர்ச்சிராதிசெதியுள்ள எல்லாருக்கும் அவ்யவதாநேந ப்ரஹ்ம ப்ராப்தி என்று நிரூபித்திருப்பது விருத்தமாம்.

ஆனால், கார்யாதிகரண பூர்வபக்ஷி அர்ச்சிராதிகதி ஏற்படுகிற எல்லாருக்கும் அவ்யவதாநேந ப்ரஹ்ம ப்ராப்தியில்லையென்று சொல்லுவதை நிராகரிப்பதற்காக, அர்ச்சிராதிகதியாலே போகிற சிலர்களுக்கு வ்யவதாநேந ப்ரஹ்ம ப்ராப்தியிருந்தபோதிலும் சிலர்களுக்கு அவ்யவதாநேந ப்ரஹ்ம ப்ராப்தியென்பது அந்த சுருதப்ரகாசிகையின் அபிப்பிராயம் என்று சொல்லுவதும் அநுபபந்நம். சரீரவியோகம் வருகிறவர்களுக்கு தெக்ஷிணாயநம், உத்தராயணம் இவையொழிய வேறு காலங்களில்லை. அப்படியிருக்க எல்லாருக்குமே அர்ச்சிராதிகதியும், அவ்யவதாநேந ப்ரஹ்ம ப்ராப்தியும் ஸ்பஷ்டமாயிருக்க சிலர் என்று விடஜித்துச்சொல்லுமது கூடாது.

மேலும் கேவலனுக்கு ஏற்படுகிற பலத்வயம் ஓரேவித்யையினுடைய பலமா? அல்லது பிந்நவித்யாபலமா? ஓரேவித்யையினு

டைய பலமென்று சொல்லும்து ஒரு வித்யைக்கு பலத்வயம் கூடாமையாலநுபபந்நம். மதுவித்யை ஒன்றாயிருந்தபோதிலும் பலத்வய மேற்படுவதுபோல் இங்கும் கூடுமென்பதும், அநுபபந்நம். மதுவித்யையில் கார்யாவஸ்த ஆதித்யசரீரக ப்ரஹ்மஸ்வரூபமும் காரணாவஸ்த ஆதித்யசரீரக ப்ரஹ்மஸ்வரூபமும் விஷயமாக ஏற்படுகிறபடியால் பலபேதமேற்படலாம். இங்கு அப்படி விஷய பேதமில்லாமையாலே அது கூடாது.

ஆனால் பஞ்சாக்நிவித்யையில் ஜீவாத்மஸ்வரூபமும் பரமாத்ம ஸ்வரூபமும் விஷயமாக ஏற்படுகிறபடியால் அந்த விஷயபேதத்தைக்கொண்டு பலத்வயம் ஏற்படலாமென்னில் ஸர்வ ப்ரஹ்ம வித்யைகளிலும் இந்த விஷயபேதம் ஏற்படுவதால் பலத்வயமும் ஏற்படும். மதுவித்யையினுடைய பலங்களான கார்யாநுபவ நித்யாநுபவங்களுக்குக் காலபேதம் ஏற்படுவது ஆவசியகமாயிருப்பது போல் இங்குங்கூடாது. ப்ரஹ்மாத்மக ஸ்வாத்மோபாஸநமாகையாலே அதற்குப் பலமாக கேவலாத்மாநுபவம் ஏற்படாது.

இரண்டாவது பக்ஷமும் அநுபபந்நம். ஒரே அதிகாரிக்கு வித்யத்வயாநுஷ்டாநம் அநுபபந்நமாகையால் கார்யாதிகரண ச்ருத ப்ரகாசிகையில் ஜாபகனுக்கு மூர்த்தந்யநாடியால் நிஷ்க்ரமணமில்லை ஜிஹ்வையில் நின்றும் நிஷ்க்ரமணந்தான். பாரதத்திற் சொல்லப் பட்டிருக்கிறதென்று நிரூபித்திருப்பது பாரதத்தில் எந்த பாடத்தை ஆவலம்பித்ததோ தெரியவில்லை என்று சில ஆதுநிகர்கள் சொல்லுவது ஸர்வஜ்ஞராயிருந்துள்ள ச்ருதப்ரகாசிகாகாரருக்கு அஜ்ஞாநத்தை யேற்படுத்துகிறதாக இருக்கிறது. இதுவுமொரு வியப்பே.

இதுவுமன்றி 'ஸவைநாநுஸஹமழயதி' 'ஸஏநாந்ப்ரஹ்ம கமயதி' என்கிற ச்ருதியானது அவ்யவதாநேந ப்ரஹ்மப்ராப்தியைச்சொல்லவில்லையென்று சில ஆதுநிகர்கள் சொல்லுமதுவும் கீழ் உதாஹ்ருதங்களான ச்ருதப்ரகாசிகா வாக்கியங்களுக்கு விருத்தமென்பதையும் கண்டுகொள்க.

ப்ரக்ருதிவியுக்த ஆத்மஸ்வரூபாவாப்தி ப்ரக்ருத்யவிஷயக பகவதவிஷயக ஆத்மாநுபவரூபமாகையாலே ப்ரக்ருதிமண்டலத்தில் கூடும் என்பதும் அநுபபந்நம். ஸஹஸ்ரநாமபாஷ்யத்தில்

'முக்தாநாம்பரமாகதி:' என்பதன்வ்யாக்யாநாவஸரத்தில் '[illegible]' 'பரமேதி விசேஷேண ந முக்தாநாமேவ கேஷாஞ்சித் அர்வாசீநாகதி: ச்ரூயதே' என்று நிரூபித்தும்.

[illegible] 'ப்க்ருதிபந்த அவித்யாகர்மஸம்ஸ்கார ருசிவிபாகேப்ய: ஆவரணேப்ய: ஏகாந்ததோ அத்யந்தத:ச விச்லிஷ்டா: முக்தா:' என்று நி:சேஷ ப்ரக்ருதி விநிர்மோகமுள்ளவர்களே முக்தர்களென்றும் அவர்களுக்கே கைவல்யரூபமோக்ஷமுண்டென்றும் சொல்லியிருப்பதாலும், கீதாபாஷ்யத்தில் பலவிடங்களில் ப்ரக்ருதிவியுக்த என்பது ப்ரக்ருதி விநிர்மோகத்தையே நிரூபித்திருப்பதாலும், திருவாய்மொழியில் 'சென்றாங்கின்பத் துன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால்' என்று கேவலனுக்கு ஸர்வகர்ம விநிர்மோகத்தைச்சொல்லியிருப்பதாலும் "[illegible]" "த்ருஷ்ட்வாநுகூலமாத்மாநம் அந்யத்ரவிகதஸ்ப்ருஹ: போக்யபூதபராத்மாநம் உபாயத்வேநாநுஸந்ததத், தேநைவசாபராதேநக்ஷயே ஸத்யபிகர்மணாம், திரோஹிதேசாநுகூல்ய: ஸ்வாத்மாநம் போக்யமச்நுதே" என்று கேவலனுக்கு ஸர்வகர்மக்ஷயமுண்டென்றும், ஈசுவர விஷயத்தில் ஆநுகூல்யஜ்ஞாநமில்லாமல் ஆத்மாவையே போக்யமாக நினைத்து அந்த ஆத்மாநுபவத்துக்காக ஈசுவரனையே உபாயமாக அநுஸந்திக்கிறவனாய் அந்த அபராதத்தாலே, ஸர்வகர்மக்ஷயம் ஏற்பட்டபோதிலும் கேவலாத்மாவையே போக்யமாகக்கொள்ளுகிறானென்றும், தேசிகனுக்கு ஆசார்யரான வாதிஹம்ஸாம்பீவாஹர் அருளிச்செய்திருப்பதாலும் ப்ரக்ருதி மண்டலத்தில் ஆத்மாநுபவம் ஏற்படும்பக்ஷத்தில் ஸர்வகர்மக்ஷயம் ஏற்படமாட்டாதென்றும்ஸர்வகர்மக்ஷயம் சொல்லியிருப்பதால் அவ்வாத்மாநுபவம் பிரக்ருதிமண்டலத்திலில்லையென்பதும் வெளியாம்.

மேலும் பஞ்சாக்நிவித்யாநிஷ்டனுக்கு ப்ரக்ருதி மண்டலத்தில் ஆத்மாநுபவம் ஏற்படும் பக்ஷத்தில் சரீரவியோக காலத்திலேயே

மூர்த்தந்யநாடி நிஷ்க்ரமணமும் அர்ச்சிராதிகெதியும் சொல்லியிருப்பது விருத்தமாம். பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளில் பலவிடங்களிலும் முக்தியென்று ஸர்வகர்ம விநிர்மோகத்தையே ப்ரதிபாதித்திருப்பதால் அவைகளுக்கு கௌணார்த்தகல்பநம் பண்ணுவது அநுபபந்நம்.

இப்படி பஹுப்ரமாணோபபத்திகளாலே அவாந்தரபலகல்பநம் அநுபபந்நமாகையால் பஞ்சாக்நிவித்யாநிஷ்டனான கேவலனுக்கு, ப்ரக்ருதிமண்டல பஹிர்ப்பூதமானநித்யவிபூதியினுடைய ஏகதேசத்தில் ஸ்தாநமென்றும், ப்ரஹ்மாத்மகஸ்வாத்மாநுபவமே பலமென்றும், அதில் ப்ரஹ்மஸ்வரூபத்துக்கு அப்ரதாந போக்கியதையாபாநமும், ஆத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரதாநபோக்யதயாபாநமும் உண்டென்றும் கொள்ளவேணும்.

இப்படியிருப்பதற்குக்காரணம் ஸர்வகர்மநிர்மோகம் ஏற்பட்டபோதிலும் அந்த உபாஸநஜந்ய பகவத்ஸங்கல்பமேயாம். இப்படியே பூர்வாசார்யர்களுடைய அபிப்பிராயமென்பது ஸ்பஷ்டம். ஆத்மஸ்வரூபாவிர்ப்பாவமே கைவல்யமோக்ஷமென்பது திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்த ஆறுயிரப்படியில் வ்யக்தம். அந்த ஆத்மஸ்வரூபாவிர்ப்பாவமும் 'பரஂஜ்யோதிருபஸம்பத்ய' 'பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய' என்கிற சுருதியின்படி பரப்ரஹ்மஸம்பத்யநந்தரகாலிகமாகையாலே அந்த ஸம்பத்தின் நித்யவிபூதியிலேயே யேற்படுவதாகச் சொல்லுகையால் ததநந்தரபாவியான கைவல்யமும் நித்யவிபூதியின் ஏகதேசத்திலேயே கொள்ளவேணும். பரப்ரஹ்ம ஸம்பத்யநந்தரபாவியான இந்த ஸ்வரூபாவிர்ப்பாவம் கேவலனுக்கும் ப்ரஹ்மவித்யாநிஷ்டனுக்கும் ஸாதாரணம். ததநந்தரபாவியான திவ்யநகரப்ரவேசம், பர்யங்காரோஹணம் முதலானவை ப்ரஹ்மவித்யாநிஷ்டனுக்கு அஸாதாரணம். ப்ரஹ்மஸ்வரூபமாவது 'ஸர்வதஃ ப்ருஷ்டே' 'ஸர்வத: ப்ருஷ்டே' என்கிற சுருதியின்படி ப்ரக்ருதி மண்டலத்திற்குப் புறம்பு அநுபவதேசமிருப்பதால் அதுவே கேவலனுக்கு அநுபவதேசதயா அநுபாவ்யம். ப்ரஹ்மவித்யாநிஷ்டனுக்கு அநுபவதேசமாயும், ஸாக்ஷாத் ப்ராப்யமாயுமிருக்கும். மதுவித்யையில் பலத்வயம் ஸ்ரீபாஷ்ய முதலான க்ரந்தங்களில் ஸ்பஷ்டமாக ப்ரதிபாதித்திருப்பதுபோல் பஞ்சாக்நிவித்யாநிஷ்டனுக்கும் பலத்வயமிருக்கும்பக்ஷத்

தில் ப்ரதிபாதித்திருக்கலாம். மேலும் பலத்வபமில்லையென்பதற்கே கீழ்நிரூபித்தபடி ப்ரமாணோபபத்திகளிருப்பதையும் கண்டுகொள்க.

இப்படியிருக்க கேவலம் அர்பதாநுபபத்தியைக்கொண்டு அநந்யதாஸித்தங்களான அநேக ப்ரமாணங்களுக்கு விருத்தமாக அவாந்தர பலகல்பநம் முதலானவை அநுபபந்நம் என்பது ஸ்பஷ்டம். இப்படி கைவல்ய ஸ்வரூபம் யதாமதிநிரூபிக்கப்பட்டது. இதனுடைய விஸ்தரம் பூர்வாசார்ய க்ருந்தங்களிற் கண்டுகொள்க. இனி ப்ரஹ்மவித்யாநிஷ்டனுடைய பலம் நிரூபிக்கப்படும்.

தொடரும்.

ஸ்ரீ:

நம்பெருமாள் கைங்கர்யநிதி.

விஷ்ணு ஆலயங்கள் பலவற்றுள்ளும் மிகச்சிறப்புடையதாய் விளங்குவது திருவரங்கம்பெரியகோயிலென்று வழங்கப்பெறும் ஸ்ரீரங்கமேயாம். இத்திவ்யதேச எம்பெருமானை ஆழ்வார் பதின்மரும் மங்களாசாசனஞ் செய்தார்கள். பூர்வாசார்யர்கள் பலரும் இத்திவ்யதேசத்தில் மண்டிநின்று தம் வாழ்நாளைக் கழித்தார்கள். இதனாலும் இதன் பெருமை விளங்கிக்கிடக்கிறதல்லவா! இன்னும் மற்ற திவ்வியதேசத்திற்கில்லாத வைபவம் இத்திவ்வியதேசத்திற்குப் பலவுள. அவற்றையெல்லாம் ஈண்டெடுத்துரைப்பின் விரியுமாதலால் அவை ஒழிக்கப்பட்டன. இதுநிற்க;

நித்ய நைமித்திகாதி உத்ஸவங்களும் மற்றத்திவ்வியதேசத்தில் நிகழ்வதைக் காட்டிலும் இத்திவ்யதேசத்தில் மிகவும் விமரிசையாகவே நிகழ்கின்றன. இவ்வுத்ஸவங்கள் எக்காலத்தும் குறைவின்றிச் செவ்வனே நடைபெற்று வருவதற்காகப் பண்டைக்காலத்து நீதி மன்னர் முதலானவர்களால் பலகிராமங்கள் தர்மமாக விடப்பட்டன. அவையெல்லாம் இப்பொழுது இந்தத் தேவஸ்தானத்தாரின் ஆட்சியிலில்லை. காலாநுகுணமாகப் பதார்த்தங்களின் விலை அதிகரித்து விட்டமையால் நமது கெவர்மெண்டரால் இத்தேவஸ்

தானத்திற்குக் கொடுக்கப்படும் வருவாயைக் கொண்டு உத்ஸவங்களைச் செவ்வனே நடத்துவதற்கியலாத நிலைமை வந்துளது.

இவ்வுலகுக்கோர் உயிர் ஸ்தானமாக விளங்குகின்ற இத்திவ்ய தேசத்தில் நித்ய நைமித்திகாதி உத்ஸவங்கள் முன்னுள்ள நிலைமையிற் குறைவாக நடைபெறுமேல் அது இவ்வுலகில் வாழும் எல்லாருடைய குறைவாக மதிக்கப்படுமன்றோ! இக்குறைவினை யகற்றுதற்குச் சில தார்மிகர்கள் முன்வந்துள்ளார்கள். இவர்கள் எல்லோருக்கும் ஒரு பிரீதியை விளைவித்து அதன் மூலமாகக் கைங்கர்யத்திற்கு நிதி சேர்க்கவேண்டுமென்று ஆராய்ந்து லாட்ரி என்ற கார்யத்தில் பிரவர்த்தித்தார்கள். தம் நன்மையே நாடிச் செல்கின்ற இக்காலத்தில் பொது நலத்தை விரும்பிச்சென்ற இவர்களுடைய நன் முயற்சி மிகவும் போற்றத்தக்கதே. இவர்களது ஊக்கமும் நன்முயற்சியும் பயனெய்தும்படி இந்த லாட்ரியை ஆதரிப்பதற்கு எல்லோரும் முன்வருவார்களாக. இது நிற்க;

நாளது ௵ ஆனிமாதத்திய சஞ்சிகையில் வேதாந்த தீபிகைப் பத்திராதிபர் இந்த லாட்ரி விஷயமாகத் தமக்குடன்பாடில்லாத அபிப்ராயத்தைத் தெரிவித்திருக்கிறார். அவை:— லாட்ரி என்பது ஓர் அதர்மச்செயலாகுமேல் அதனால் வரும் ஊதியம் ஸ்ரீரங்கநாதனுக்கு எவ்வாறு உகப்பை விளைவிக்கும்? ராஜாங்கத்தார் இதைத் தடை செய்யாது ஆமோதித்த காரணத்தால் இது தர்மமாமாறெங்ஙனம்? கார்யத்தில் முயல்வாறன்றோ தர்மா தர்மங்களை ஆய்ந்தோய்ந்தறியவேண்டும். சாஸ்திர விரோதமில்லாமல் தேஹ உழைப்பினாலாவது, புத்தியின் திறமையால் பிறருக்குபகரித்தாவது இவை போன்ற வேறுபல உபாயத்தாலாவது சம்பாதிக்கு முறையன்றோ உத்தமமாகும். பெரும்பாலருக்கு நஷ்டத்தை விளைவித்து ஒருசிலர்க்கே பயனைத்தருகின்ற இது நன்மையைப் பயப்பது யாண்டையது? இது, பேராசையின் வசப்பட்டு பிறர் கெடுதற்கு ஹேதுவாகிய பணிபாகுமே யல்லது பிறிதில்லை. முடிவாக ஆராய்ந்து பார்க்கின்றவிடத்தில் சூது சொக்கட்டான் முதலிய விர்த்திகளோடு ஒற்றுமையுடையதாகவே மதிக்கப்படும். ஆதலால் இதை நாம் அங்கீகரிக்கின்றோமில்லை; என்பனவாம்.

இவர் இங்குரைத்தவற்றையெல்லாம் ஒருவகையாராய்ந்து அவற்றிற்குச் சமாதானம் கூறுதல் பொருத்தமுடைத்தாமாதலால் அவை இங்கு விவரித்துரைக்கப்பெறும்.

திபிகாசிரியர் லாட்ரி என்பது சூது போர் முதலிய தொழில் களோடு ஒப்புமையுடையதாம் என்ருர். அது எவ்வாறு ஒப்புமை யுடையதாம்? சூது ஒருவரோடொருவர் எதிர்த்து நின்று ஒருவர் ஏககாலத்தில் பெரும்நிதியை இழத்தற்குரிய கொடிய கிருத்யமாகு மல்லவா? கேட்டின்கண் சம்சயஜ்ஞாநமும் நிச்சயஜ்ஞாநமும் முயற் சியையுண்டுபண்ணுவதில்லை. நன்மையில் சம்சயஜ்ஞாநமும் நிச்சய ஜ்ஞாநமும் முயற்சியை உண்டுபண்ணும். சூதில் ஒத்தபெரும் பொருட் கேட்டில் சம்சயம் நிகழ்கின்றதினுல் இதுவிஷயத்தில் ஆன்ருேர்கட்கு முயற்சியுண்டாவதில்லை. அதனுல் சாஸ்திரமும் இதை நிஷேதிக்கிறது. லாட்ரி சுவல்பதிரவியத்தில் பெரும்பொருள் கிடைக்கும் நன்மையில் சம்சயம் நிகழ்வதால் எலுமிச்சம்பழம் கொடுத்து ராஜ்யம் பெருவதுபோல இதில் ப்ரவர்த்தியுண்டாகலாம். மேலும் இதுவிஷயத்தில் ஒவ்வொருவராலுங் கொடுக்கப்படுகிற திரவியமோ மிகவும் அற்பம். அதனுல் அது பல ஸித்தியைத்தரா தொழியினும் 'மோசத்திற்குள்ளாளுேம்' என்று அவர்கள் கருது தற்கிடமில்லை. அவர்கள் திரவியத்தைக்கொடுக்கின்ற காலத்திலும் மனமொப்புமையோடே கொடுக்கிருர்களாதலால் அவர்களை வஞ் சித்து வவ்வுகிறதென்ற குற்றம் வருதற்கும் வழியில்லை. அதிருஷ்ட முடையவர்கள் இதனுல் விழுநிதியைப் பெறுகிருர்கள். ஆகவே இது எவரையும் ஏமாற்றுகிற தொழிலோடு ஒப்புமையுடைய தாகாது. இஃதொருபுறமிருக்க இதுவிஷயத்தில் ஒவ்வொருவரா லும் கொடுக்கப்படுகிற ரூபா ஒன்றில் அரை ரூபா பகவத் கைங்கர் யத்தில் உபயோகப்படுகிறதினுல் அவர்கட்கு அதிருஷ்ட ரூபமான அளவில்லாத நன்மை அவர்கள் நினையாதிருக்க வந்தெய்துமல்லவா! ஆதலால் ஆஸ்திகராயிருப்பார் எவரும் இதைத் தடைசெய்யாதிருப் பாரென்றே நம்புகிறேன்.

இனி, திபிகாசிரியர் கருதியபடி லாட்ரி என்பது அகிருத்யத் தோடொப்புமையுடையதாம் என்ற பக்ஷத்தை அங்கீகரித்துக் கொண்டு நோக்கினுலும் அது அங்ஙனமாகாதென்பது நிரூபிக்கப் படும்.

ஹிதத்தைப் போதிப்பிக்கின்ற சாஸ்திரத்தில் பல விதிவாக் யங்கள்காணப்படுகின்றன. அவ்வாக்யங்களுள் இன்னின்ன வாக்யம் இன்னின்னதை நோக்கி எழுந்ததாமென்ருராய்வதே அறிஞரின்

கடமையாகும். திமிகாசிரியர், கல்வழியி லீட்டிய பொருளைக் கொண்டே ஸத்விஷய கார்யத்தைச் செய்தல் வேண்டும். அதனல் எம்பெருமானுக்கு முகமலர்த்தி யுண்டாகுமென்று கருதி யுரைத்த வாக்யம் ஸ்வப்ரயோஜனபரனை நோக்கி எழுந்ததாம். பரப்ர யோஜனபரனை நோக்கி எழுந்ததில்லை. எவ்வுயிர்க்கும் இடுக்கண் செய்பலாகாதென்று விலக்கிய பொதுவிதியானது யாகத்திற் பசுக் கொலை செய்தலாகிய சிறப்புவிதியை மறுக்காதது போல ஸ்வப்ர யோஜனபரனை நோக்கி எழுந்த விதியானது பரப்ரயோஜனபரனைப் பாதிக்காது. இதனல் ஸ்வப்ரயோஜனபரன் தன்னுடைய நன்மை யே நாடிச் செல்பவனுகலால் அவன் செம்மையுடையவனுய் நின்றே ஸத்கார்யங்களைச் செய்யவேண்டு மென்பதும், பரப்ரயோஜனபரன் தன் நன்மையைச் சிறிதும் நாடாது எம்பெருமானுடைய முக மலர்த்திக்குரிய கார்யங்களைச் செய்பவனுகலால் இவன் அங்ஙன மிருக்கவேண்டு மென்ற நிர்ப்பந்தமில்லை யென்பதும் விளங்குகின் றன.

பரப்ரயோஜனபரனுக்கு எம்பெருமான் திருவுள்ளத்திற்குகந்த கார்யத்தைச் செய்யவேண்டுமென்றே பேரவாவால் முயற்சி நிகழும். அவனுக்கு இங்ஙனம் நிகழ்கின்றவிடத்து இவன் யாவரையும் ஈடு படுத்தத்தக்க அவனது ஸௌந்தர்யாதி குணசேஷ்டிதங்களில் ஈடு பட்டுத் தன்னிபல்பை மறந்து தன்னை அழியமாறியும் கார்யஞ் செய்தற்கு முற்படுவான். விஷயவைலக்ஷண்யம் தன்னையழிய மாறும்படி செய்யும். அதனல் அது தோஷமுடையதாகாது. இக்கருத்துப்பற்றியே ஆன்றோர்கள் வைஷ்ணவத்வம் உப்பைப் போன்றிருக்கு மென்று பணித்தார்கள். உப்பு தன் ஸ்வரூபத்தை யழித்துத் தன்னைச்சார்ந்த தொன்றற்கு ருசியைத் தருவது போல வைஷ்ணவனுயிருப்பான் தன்னையழிய மாறியும் பரனுக்கு முக மலர்த்தியை யுண்டுபண்ணக் கடவனென்ற பொருள் விளங்குகிற தல்லவா!

இங்ஙனம் கொள்ளாதபோது திருமங்கை மன்னன் சாஸ்திரத் தால் விலக்கப்படுகிற களவுத்தொழிலை மேற்கொண்டு அதனல் கிடைத்த பொருளைப் பகவத் விஷயத்தில் விநியோகப்படுத்தின ரென்பது எவ்வாறு பொருந்தும்? பகவத் கைங்கர்ய விஷயத்தில் தம்மை யழியமாறியேனும் ஈடுபடவேண்டுமென்ற பேரவா பிடித்

துந்த அதனலன்றோ இவர் இக்கார்யத்தில் இழிந்தார். இன்னும் உண்மையை ஆராயுமிடத்து ஒன்றொழியாத எல்லாப்பொருள்களும் ஸர்வேசுவரனுக்குரிமை யுடையனவாயிருக்க இவ்வுண்மை யறியாது அஹங்காரிகள் பொருளைத் தமதென்று மதித்து அதைப் பகவத் விஷயத்தில் ஈடுபடுத்தாதிருப்பதைக் கண்டு இவர் அவர்களைப் பெருந்திருடராக நினைத்து அத்திருடர்கட்குத் தாமோர் திருடராய் நின்று அவர்கள் தமதென்று கருதிய பகவத் பொருளை உரியவன் பாற் சேர்த்தார்; என்பது விளங்கும்.

ஸர்வேசுவரன் தன்னைத் தஞ்சமாகவந்தடைந்த இந்திரனைக் காப்பாற்றுதற்காகத் தான் இரப்பாளனாகவந்து நின்றான். இங்ஙனம் தன்னை இரப்பாளனாக்கியது தன்னியற்கைக்கு எவ்வகையானும் பொருந்துமா? பொருந்தாதொழியினும் அச்செயல் பரார்த்தமாக நிகழ்ந்ததினால் அது புகழத்தக்கதாய் விளங்கியதுபோல பரார்த்தமாகத் தன்னையழியமாறிக்கார்யஞ்செய்யினும் அதுபுகழும் பெற்றியதாகவே விளங்கும்.

இதனால் இந்த லாட்ரி என்ற கார்யத்தை மேற்கொண்ட தார்மிகர்கள் தர்மஸூக்ஷ்மங்களை ஆராய்ந்து மேற்கொண்டனரேயன்றித் தீபிகாசிரியர் கருதியபடி ஆராயாமல் மேற்கொண்டார்களென்று கொள்ளுதற்கிடமில்லை.

'உண்டியே யுடையேயென வுகந்தோடும், இம்மண்டலத்'தில் பகவத்கைங்கர்யம் செய்யப்பெறுவாரைக் கண்டவிடத்து 'இவ்விபூதியிலிவ்வியல்புடையாரையுங் காணப்பெற்றோமே' என்று அவர்கள்பால் பேரன்பு பாராட்டி ஒழுகுவதே நமது கடமையாகும்.

ப. அ.